| | | | |
|---|---|---|---|
| Headline | Send for prostitution | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 26 Jan 2012 | Color | Black/white |
| Section | News | Circulation | 60,000 |
| Page No | 6 | Readership | 252,000 |
| Language | Tamil | ArticleSize | 163 cm² |
| Journalist | N/A | AdValue | RM 395 |
| Frequency | Daily | PR Value | RM 1,185 |



# விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டேன்

## 15 வயது சிறுமி போலீஸில் புகார்

மலாக்கா, ஜன.26–

தன்னைப் பிடித்து வைத்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தியவர்கள் தன்னுடைய வாடிக்கையாளர்களிடம் இருந்து 800 வெள்ளியை கட்டாயமாக வசூலித்ததாக பதினைந்து வயது சிறுமி கூறினார்.

தான் இன்னும் இளமையாக இருப்பதாக காரணம் கூறி அவர்கள் அளவு கடந்த தொகையை வசூலித்ததாக அந்தச் சிறுமி கூறினார்.

டியூங் எனுமிடத்தைச் சேர்ந்த அந்தச் சிறுமி தன்னைப் பிடித்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தியவர்களிடம் இருந்து இம்மாத தொடக்கத்தில் தப்பி வெளியேறினார்.

பெண்களைக் கவர்ந்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வரும் கும்பல்களின் நடமாட்டத்தை கண்டறிய நியமிக்கப்பட்டிருக்கும் போலீஸ் அதிகாரிகளிடம் அவர் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

அந்தச் சிறுமி வாடிக்கையாளரின் உதவியோடு ஜனவரி 11ஆம் தேதி தப்பி வெளியேறினார். சிறுமியை ஒருநாள் முழுவதும் தன்னுடன் வைத்திருக்கப் போவதாகக் கூறி அவர் தப்பி வெளியேற அந்த வாடிக்கையாளர் உதவி இருக்கிறார்.

அந்த வாடிக்கையாளர் செந்தூல் போலீஸ் நிலையத்திற்கு சிறுமியை அழைத்துச் சென்றிருக்கிறார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் தேதி கடத்தப்பட்ட தான் அன்று முதல் விபச்சாரத்தில் ஈடுபடும்படி நிர்பந்திக்கப்பட்டு வந்ததாக அந்தச் சிறுமி போலீசில் புகார் செய்திருக்கிறார். அந்தச் சிறுமி அவருடைய காதலனுடன் சேர உதவுவதாக மலாக்கா பண்டார் ஹிலிரைச் சேர்ந்த 26 வயது மாது கூறியதாக தெரிய வருகிறது.

ஆயினும், அந்த மாது அவரை சிலாங்கூரிலுள்ள ஓர் அடுக்குமாடி குடியிருப்புக்கு அழைத்துச் சென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்தி இருக்கிறார். அந்த 26 வயது மாது, அவரின் கணவர், 16 வயது பெண் ஆகியோரை போலீசார் கைது செய்திருப்பதாக மலாக்கா துணை சிஐடி தலைவர் சூப்ரிண்டெண்ட் ஆர்.குணராஜன் கூறினார்.

Powered by: MediaBanc Be informed